# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102111

1. District : மாவட்டம் Tirunelveli | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2022 | FIR No.: மு.த.அ. எண் 02/2022 | Date: நாள் 24.02.2021

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Act 16 of 2018 | Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 23.02.2022 12.00 hrs | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.02.2022 | Time : நேரம் 10.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 60 Km North West
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி O/o the Assistant Engineer, TANGEDCO, Palankottai, Tenkasi District .
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.MANOJ | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.MARIAPPAN
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.01.1981 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Farmer | (g) Address : முகவரி 2/74, South Street, Vellappaneri, Tirunelveli District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.மோசஸ், வணிக ஆய்வாளர், உதவி மின் பொறியாளர் அலுவலகம், பழங்கோட்டை, தென்காசி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

* GCP 240-34(Type-2) 90.000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 24.02.2022-ம் தேதி காலை 10.00 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் J.அனிதா ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.M.மனோஜ் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட தென்காசி மாவட்டம் பழங்கோட்டை உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரியும் திரு.மோசஸ் பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 24.02.2022-ம் தேதி காலை 11.00 மணிக்கு திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் தொலைபேசி மூலம் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.மெக்லரின் எஸ்கால் அவர்களை தொடர்பு கொண்டு அப்பிரிவின் அடுத்த குற்ற எண் கேட்டு தெரிந்து, திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.02/2022 u/s 7(a) of the PC Act 1988 as amended by Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் M.மனோஜ், வயது 41/22. த/பெ மாரியப்பன், க.எண்.2/74, தெற்கு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

J. Anitha 24/2/2022.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு M. Manoj 24/2/22

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.2.22 11.45 hrs.

Name: பெயர் J. Anitha
Rank: நிலை ....................No. எண் .........
Inspector of Police
V&AC
Tenkasi

தெரு, வெள்ளப்பனேரி, மானூர் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை தென்காசி. ஐயா, நான் திருநெல்வேலி மாவட்டம், மானூர் தாலுகா வெள்ளப்பனேரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் முடிந்து பேச்சியம்மாள் என்ற மனைவி உள்ளார். நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பின்பு நான் வெளிநாட்டில் வேலை பார்த்துவிட்டு தற்போது எனது தந்தையார் திரு.மாரியப்பன் அவர்களுக்கு சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு திரு.ரஜினி என்ற அண்ணனும், திருமதி.மைதிலி என்ற தங்கையும் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனது தந்தைக்கு வெள்ளப்பனேரி கிராமத்தில் சுமார் 2 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் இலவச விவசாய மின் இணைப்பு பெறவேண்டி கடந்த 2010ம் வருட தொடக்கத்தில் விண்ணப்பித்திருந்தார். அதன்பேரில் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருந்து இலவச விவசாய மின் இணைப்பு பெற தயார் நிலை பதிவு செய்ய தென்காசி மாவட்டம் பழங்கோட்டை உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க கடிதம் வந்தது. அதன்படி எனது தந்தையும் மின் இணைப்புக்கு ஏற்பாடு செய்துவிட்டு, மின் மோட்டாரும் வாங்கி பொருத்தி விட்டு, அந்த கடிதத்தில் குறிப்பிட்டபடி ஆவணங்களை பழங்கோட்டை உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் கொடுத்துவிட்டார். கடந்த 16.02.2022ம் தேதி பழங்கோட்டை மின் வாரிய உதவி பொறியாளர் அலுவலக வணிக ஆய்வாளர் திரு.மோசஸ் அவர்கள் எங்கள் தோட்டத்தில் ஆய்வு செய்துவிட்டு எங்களது வீட்டிற்கு வந்து எனது தந்தையிடம் ஆபிசில் உள்ள பதிவேட்டில் கையெழுத்து போட வேண்டும் நாளை ஆபிசுக்கு வந்து கையெழுத்து போட்டுவிட்டு செல்லுங்கள் என்று சொல்லிவிட்டு சென்றார். அதன்படி எனது தந்தை, எனது அண்ணன் திரு.ரஜினியுடன் 17.02.2022ம் தேதி பழங்கோட்டை மின்வாரிய உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று பதிவேட்டில் கையெழுத்து போட்ட பின்பு, இலவச விவசாய மின் இணைப்புக்கு தயார் நிலை பதிவு விபரம் சங்கரன்கோவில் செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்காக தனக்கு ரூ.5,000/- தனியாக கொடுக்க வேண்டும் என்றும், ரூ.5,000/- கொடுத்தால்தான் இலவச விவசாய மின் இணைப்புக்கு நடடிவக்கை எடுக்க முடியும் என்று வணிக ஆய்வாளர் திரு.மோசஸ் சொன்னதாகவும், எனது தந்தையும் தற்போது பணம் இல்லை என்று சொல்லிவிட்டு வந்து விட்டதாகவும் என்னிடம் சொன்னார். பின்பு ஒரு வார காலமாகியும் இலவச விவசாய மின் இணைப்பு கொடுக்காததால், எனது தந்தைக்கு வயதாகிவிட்டதாலும், அவரால் அலைய முடியாததாலும் என்னை பழங்கோட்டை மின் வாரிய அலுவலத்திற்கு சென்று வணிக ஆய்வாளரை பார்த்து இலவச விவசாய மின் இணைப்பு பெற ஏற்பாடு செய்ய சொன்னார். நானும் நேற்று 23.02.2022ம் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் வணிக ஆய்வாளர் திரு.மோசஸ் அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து பார்த்தபோது அவர், எல்லாம் ரெடியாகிவிட்டது ரூ.3,500/- எனக்கு தனியாக

தந்தால்தான் இலவச விவசாய மின் இணைப்புக்கு தயார் நிலை பதிவு விபரத்தினை செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி இலவச விவசாய மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொல்லிவிட்டார். நானும் வேறு வழியில்லாமல் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தபொழுது இலவச விவசாய மின் இணைப்பு வழங்க லஞ்சமாக ரூபாய் 3,500/- பணம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. மேற்படி விபரத்தை எனது தந்தையிடம் சொன்னேன். அவரும் லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லை என்று சொல்லி விட்டு, இது சம்மந்தமாக லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்க வேண்டும். என்னால் அலைய முடியாது நீயே சென்று புகார் கொடு என எனக்கு அங்கீகாரம் கொடுத்து கடிதம் எழுதி அதில் எங்க அப்பாவும், அண்ணன் ரஜினியும் கையெழுத்து போட்டு கொடுத்தார்கள். என்னிடம் எங்கள் தோட்டத்திற்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க லஞ்சமாக ரூ.3,500/- கேட்ட பழங்கோட்டை உதவி மின் பொறியாளர் அலுவலக வணிக ஆய்வாளர் திரு.மோசஸ் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். எனது அப்பா எனக்கு கொடுத்த அங்கீகார கடிதத்தையும் இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, (ஒம்.M.மனோஜ்)

அனுப்புநர் க. மாரியப்பன், 70/22, த/பெ. கருப்பசாமித்தேவர், க.எண்.2/47, தெற்கு தெரு, வெள்ளப்பனேரி, திருநெல்வேலி மாவட்டம். பெறுநர் உயர்திரு ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, தென்காசி. ஐயா, வணக்கம். நான் திருநெல்வேலி மாவட்டம், மானூர் தாலுகா வெள்ளப்பனேரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ரஜினி, மனோஜ் என்ற இரு மகன்களும், மைதிலி என்ற மகளும் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. எனக்கு வெள்ளப்பனேரி கிராமத்தில் சுமார் 2 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அந்த இடத்தில் இலவச விவசாய மின் இணைப்பு கேட்டு 2010ம் வருடத்தில் மனு கொடுத்திருந்தேன். அது தொடர்பான அனுமதி கடிதமும் சங்கரன்கோவில் மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருந்து வந்தது. அதன்படி நான் இலவச மின் இணைபபிற்கான வேலைகளை முடித்து, ஆவணங்களையும் பழங்கோட்டை மின் வாரிய அலுவலகத்தில் கொடுத்து விட்டேன். கடந்த 16.02.2022ம் தேதி CI திரு.மோசஸ் அவர்கள் வெள்ளப்பனேரியில் என் வீட்டிற்கு வந்து அலுவலகத்தில் வந்து கையெழுத்து போட வரச் சொன்னார். நானும் எனது மூத்த மகன் ரஜினியும் மறு நாள் 17.02.2022ம் தேதி பழங்கோட்டையில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று திரு.மோசஸ் அவர்களை பார்த்த போது அங்கு உள்ள பதிவேட்டில் என்னிடம் கையெழுத்து வாங்கினார் பின்பு, அவர் என்னிடம் ரூ.5,000/- தந்தால்தான் இலவச மின் இணைப்புக்கு அனுப்புவேன் என்று சொன்னார், நான் என்னிடம் பணம் இல்லை என்று

சொல்லி விட்டு வந்து விட்டேன், பின்னர் 5 நாட்களாகியும் மின் இணைப்பு வழங்காததால், எனது மகன் மனோஜிடம் அவரை சென்று பார்த்து இலவச மின் இணைப்பிற்கு ஏற்பாடு செய்ய சொன்னேன். அவனும் 23.02.2022ம் தேதி திரு.மோசஸை பார்த்த போது ரூ.3,500/- கொடுத்தால்தான் இலவச விவசாய மின் இணைப்பு கொடுக்கமுடியும் என்று சொன்னதாக சொன்னான். எனக்கு வயதாகி விட்டதாலும் உடல் நிலை சரியில்லாததாலும் இலவச மின் இணைப்பு பெறுவது தொடர்பான வேலைகளுக்கு எனது மகன் மனோஜிக்கு முழு அங்கீகாரம் கொடுக்கிறேன். தேதி 24.2.22. இப்படிக்கு, sd மாரியப்பன், M.Rajini, M.Manoj.

Sir, Received the complaint along with the authorization letter of Tr.Mariappan on 24.02.2022 at 10.00 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tirunelveli V&AC Cr.No.02/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 24.02.2022 at 11.00 hrs. sd.Tmt.J.Anitha, Inspector of Police, V&AC, Tenkasi.

இந்த வழக்கின் அசல் FIR, அசல் புகார் மனு மற்றும் திரு.மாரியப்பன் அவர்களின் அங்கீகார கடிதம் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

J. Anitha.
24/2/2022.

**INSPECTOR OF POLICE**
**Vigilance and Anti Corruption**
**Tenkasi Detachment,**
**Tenkasi.**